# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 31.12.2018 | | 2018ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி திங்கள் கிழமை மாலை 04.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம்நடைபெறும்.<br>தனி அலுவலர்,<br>துவாக்குடி நகராட்சி. | |
| 31.12.2018 | 268 | **பொருள் எண். 1**<br>தமிழ்நாட்டில் 16.11.2018 ம் தேதி கஜா புயலினால் பாதிப்படைந்த திருவாரூர் நகராட்சி பகுதியில் சீரமைப்பு பணி மேற்கொள்வதற்கு துவாக்குடி நகராட்சியில் இருந்து துப்புரவு பணியாளர்களை அனுப்புமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்திரவிட்டதை தொடர்ந்து திருவாரூர் நகராட்சிக்கு சீரமைப்பு பணி மேற்கொள்ள செல்லுமூ 22 துப்புரவு பணியாளர்களுக்கு மழை அங்கிகள் வாங்கி வழங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 12000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – பணியின் அவசர அவசியம் கருதி மழை அங்கிகள் வாங்கி வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1819 / எச்1 / 2018** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2018 | 269 | **பொருள் எண். 2**<br>துவாக்குடி நகராட்சி பகுதியில் பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்படும் பொது கழிப்பிடங்களின் கழிவு நீர் தொட்டிகள் நிரம்பியுள்ளதால் அதனை அகற்றுவதற்கு கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. தாமரை செப்டிக்டேங்க் கிளினிங் – ரூ. 3400/–<br>2. பாபுகுட்டி செப்டிக்டேங்க் கிளினிங் – ரூ. 3900/–<br>3. ஜெயந்தி செப்டிங்டேங்க் கிளினிங் – ரூ. 3600/–<br>மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தாமரை செப்டிக்டேங்க் கிளினிங் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 60000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பொது மக்களின் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதற்கும், தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>**ந.க.எண். 1855 / எச்1 / 2018** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td>31.12.2018</td><td>270</td><td><u>பொருள் எண். 3</u><br>துவாக்குடி நகராட்சியின் டம்பர் பிளேசர் வாகனம் எண். TN 45 BY 4097 -க்கு தகுதி சான்றிதழ் வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து பெறுவதற்கு வண்டியின் பழுதுகள் நீக்குதல், வர்ணம் பூசுதல், புகை சான்று பெறுதல், வேககட்டுப்பாடு கருதி பொருத்துதல் மற்றும் தகுதி சான்று பெறுவதற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கட்டணம் செலுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள உண்டான உத்தேச செலவினம் ரூ. 1,80,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 394 / எச்1 / 2017</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.12.2018</td><td>271</td><td><u>பொருள் எண். 4</u><br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 1.4.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை தொடர்ந்து தினத்தந்தி நாளிதழில் 27.10.2018–ம் தேதியில் விளம்பரம் வெளியிட்டமைக்கு பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியல் படி ரூ. 11760/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 1351 / அ1 / 2018</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.12.2018</td><td>272</td><td><u>பொருள் எண். 5</u><br><br>தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018-19 -ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண். 34, அறிவிப்பு எண்.14-ல், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 27.12.2018–ம் தேதிய மூன்றாவது அழைப்பில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br><table><tr><td>வ. எண்</td><td>பணியின் விவரம்</td><td>ஒப்பந்தாரர் பெயர்</td><td>நகராட்சிக்கு செலுத்தும் கட்டணத்தொகை (லிட்டருக்கு)</td><td>பொது மக்களிடம் வசூல் செய்யும் தொகை (லிட்டருக்கு)</td></tr></table></td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr>
<td>1.</td>
<td rowspan="2">நகராட்சிகளில் உள்ள 10 வார்டுகளில் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவுதல்</td>
<td>1) BMT Associaties, Trichy</td>
<td>1. 0.10 பைசா / ஒரு லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br><br>2. ரூ. 1.00 / 20 லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br><br>3. ரூ. 2.00 / 20 லிட்டருக்கு / வீடுகளில் சப்ளை செய்யப்படுவதற்கு</td>
<td>1. ரூ. 1.00 / ஒரு லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br><br>2. ரூ. 7.00 / 20 லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br><br>3. ரூ. 20.00 / 20 லிட்டருக்கு / வீடுகளில் சப்ளை செய்யப்படுவதற்கு</td>
</tr>
<tr>
<td>2.</td>
<td>2) AVT Enterprises, Pudukottai</td>
<td>1. 0.10 பைசா / ஒரு லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br><br>2. ரூ. 1.00 / 20 லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br><br>3. ரூ. 2.00 / 20 லிட்டருக்கு / வீடுகளில் சப்ளை செய்யப்படுவதற்கு</td>
<td>1. ரூ. 2.00 / ஒரு லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br><br>2. ரூ. 8.00 / 20 லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br><br>3. ரூ. 22.00 / 20 லிட்டருக்கு / வீடுகளில் சப்ளை செய்யப்படுவதற்கு</td>
</tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u> – குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள BMT Associaties, Trichy நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.<br><br>
ந.க.எண். 1332 / இ1 / 2018
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.12.2018</td>
<td>273</td>
<td><u>பொருள் எண். 6</u><br>
துவாக்குடி நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு கீழ்கண்டுள்ளவர்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர்.<br><br>
1. திருமலை நாடகசபா – ரூ. 7000/–<br>
2. தமிழ்தாய் நாடக மன்றம் – ரூ. 7500/–<br>
3. சரஸ்வதி நாடகசபா – ரூ. 8000/–<br>
4. தென்னகத்து கலலைத்தென்றல் – ரூ. 6700/–</td>
<td><u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 5. நியூ இந்தியா கலைக்குழு – ரூ. 6800/–<br>மேற்கண்ட ஐந்து விலைப்புள்ளிகளில் தென்னகத்து கலைத்தென்றல் என்ற கலைக்குழு மிகவும் குறைவான விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர் இதனை ஏற்றுக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள தென்னகத்து கலைத்தென்றலின் விலைப்புள்ளியை ஏற்கலாம், மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் P1/30319/2015 நாள். 18.09.2018 ல் ரூ. 2,06,000/– ஒதுக்கீடு செய்து உத்திரவிட்டுள்ளார்கள் எனவே அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 1226 / எச்1 / 2018** | |
| 31.12.2018 | 274 | **பொருள் எண். 7**<br>துவாக்குடி நகராட்சியில் உள்ள சாக்கடை பகுதிகளில் கொசு புழுக்கள் ஒழிக்கும் பணிக்கு கைவிசைப்பான் இயங்கும் கொசு மருந்து தெளிக்கும் மிஷின் வாங்கி கொள்வதற்கு மன்றம் 212 நாள். 10.09.2018 –ல் ரூ, 15000/– எண்ணிட்ட தீர்மானத்தில் அளிக்கப்பட்டுள்ளது. 2 மிஷின் வாங்கப்பட்டதற்கு ரூ. 21732/– செலவு ஏற்பட்டுள்ளது எனவே ரூ. 6732/– கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. ஏற்பட்டுள்ள கூடுதல் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – கூடுதல் செலவினத்தை அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 1382/எச்1 / 2018** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2018 | 275 | **பொருள் எண். 8**<br>துவாக்குடி நகராட்சியில் பணிபுரியும் ஆணையர், உள் மற்றும் வெளிப்புற அலுவலர்கள் அலுவலகப் பணியின் காரணமாக வெளியூர் பயணம் மேற்கொள்ளுவதற்கு 2018–19 ம் நிதியாண்டுக்கு பயணப்படி வழுங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,00,000/– ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 422/ சி1 / 2017** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 31.12.2018 | 276 | <u>பொருள் எண். 9</u><br>TN 45 AY 0474 குப்பை லாரிக்கு ஏற்படும் செலவினத்திற்கு மன்றம் 18.08.2018 ல் நடைப்பெற்ற கூட்டத்தில் அனுமதி அளித்துள்ளது. மேற்படி குப்பை வாகனத்திற்கு 1 செட் டயர் மற்றும் டியூப் விநியோகம் செய்து கொள்ளுவதற்கு விலைப்புள்ளிகள் கீழ்கண்டுள்ள நான்கு நிறுவனங்கள் அளித்துள்ளனர் அவைகள் பின்வருமாறு.<br>1. M/s. M.N.A டயர் ஆட்டோமொபைல்ஸ் – ரூ. 17600/–<br>2. M/s. கண்ணாத்தாள் ஏஜென்சீஸ் – ரூ. 17200/–<br>3. M/s. சாய் டயர் சென்டர் – ரூ. 17450/–<br>4. M/s. ஜெ. ஜெ. டயர், திருச்சி – ரூ. 15600/–<br>இந்நான்கு விலைப்புள்ளிகளில் M/s. ஜெ. ஜெ. டயர், திருச்சி என்ற நிறுவனம் மிகவும் குறைவாக விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். டயர், டியூப் ஒரு செட் பெற்று அதற்குரிய தொகை வழங்கலாம்.<br>**ந.க.எண். 414/எச்1 / 2018** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2018 | 277 | <u>பொருள் எண். 10</u><br>இந்நகராட்சி பகுதிகளில் 2018–19 ஆம் ஆண்டிற்கு நோய்தடுக்கும் கிருமி நாசினி பொருள்கள் வாங்கிக் கொள்வதற்கு மன்றம் தீர்மானம் எண். 195 நாள். 23.07.2018 ல் ரூ. 3,00,000/– க்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ள தொகையை முழுவதும் செலவிடப்பட்டுள்ளபடியால் மேலும் கூடுதல் செலவினம் (2018–19–க்கு) மேலும் ரூ. 50,000/– உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 937/எச்1 / 2018** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 31.12.2018 | 278 | <u>பொருள் எண். 11</u><br>துவாக்குடி நகராட்சியில் துவாக்குடி வடக்குமலை மற்றும் துவாக்குடி தெற்குமலை, துவாக்குடி பகுதிகளில் 17 கழிப்பிடங்கள் இயங்கி வருகிறது. இவைகள் தற்சமயம் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அனைத்து பொது கழிப்பிடங்களும் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் துவாக்குடி நகராட்சி திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லை என்று அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது, மேலும் தற்சமயம் பொது கழிப்பிடங்கள் நிரம்பியுள்ளன எனவே கழிவு நீரை அகற்றப்பட வேண்டியுள்ளதால் அதனை அகற்றப்பட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,00,000/— ஆகும். உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u> – அவசர அவசியம் கருதி உத்தேச செலவினத்தை அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 1855/எச்1 / 2018** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 31.12.2018 | 279 | <u>பொருள் எண். 12</u><br>துவாக்குடி நகராட்சி பகுதிகளில் பொது மக்கள் கூடும் இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கீழ்கண்டுள்ள பொருள்களில் விழிப்புணர்வு கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. தனிநபர் கழிப்பிடம் கட்டுதல்.<br>2. திறந்தவெளியில் மலம் கழித்தலால் ஏற்படும் தீமைகள்.<br>3. திடக்கழிவு மேலாண்மை.<br>4. டெங்கு மற்றும் பன்றி காய்ச்சல் தடுப்பு விவரம்.<br>5. பொது சுகாதாரம்.<br>6. மழைக்கால பருவ நோய்கள் தடுக்கும் விதம், பிளாஸ்டிக் ஒழிப்பு.<br>7. வரியினங்களை நிலுவையின்றி செலுத்த கோருதல்.<br><br>மற்றும் இதர பொருள்கள் குறித்து விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50,000/— ஆகும். உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u> – பொது மக்களின் விழிப்புணர்வு கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைஅவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். P1/30319/2015 நாள். 18.09.2018 ல் ரூ. 2,06,000/— ஒதுக்கீடு செய்து உத்திரவிட்டுள்ளார்கள் எனவே அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 1226/எச்1 / 2016** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

31.12.2018 | 280

**<u>பொருள் எண். 13</u>**

துவாக்குடி நகராட்சியின் பொது நிதி 2018–19 –ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 06.12.2018–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | துவாக்குடி நகராட்சி அலுவலக வளாகத்தில் இ–சேவை மையம் கட்டுதல் | 9.90 | ஆர். சிவக்குமார்<br>எம். ஜீவானந்தம் | மதிப்பீட்டை விட 0.09 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.75 % அதிகம் |
| 2. | துவாக்குடி நகராட்சி அலுவலக வளாகத்தில் பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் கழிப்பிடம் மராமத்து பணி செய்தல் | 9.80 | ஆர். சிவக்குமார்<br>எம். ஜீவானந்தம் | மதிப்பீட்டை விட 0.18 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.94 % அதிகம் |

**அலுவலக குறிப்பு : –** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.

**ந.க.எண். 1169 /2018/இ1**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

| | | | |
|---|---|---|---|
| 31.12.2018 | 281 | **<u>பொருள் எண். 14</u>**<br><br>துவாக்குடி நகராட்சியின் பொது நிதி 2018–19 –ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 28.12.2018–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண். 7,11,13 மற்றும் 15 –ல் உள்ள பழுதடைந்த குடிநீர் விநியோக குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் அமைத்தல் | 5.00 | எம். ஜீவானந்தம்<br><br>ஆர். சிவக்குமார் | மதிப்பீட்டை விட 0.13 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.98 % அதிகம் |

**அலுவலக குறிப்பு : –** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.

**ந.க.எண். 1169 /2018/இ1**

_____________ X _____________